503

Regd. No. M. 1636. JULY 1922.

சுயம்பிரகாசத்துணை.

# ஞானசூரியன்

இது ஒரு சிறந்த மாதாந்த தமிழ்ப் பத்திரிகை.

# GNANA SURIYAN

A HIGH CLASS TAMIL MONTHLY.

மலர் 1 | துந்துபி-ஸு ஆடி-மீ 1உ | இதழ் 4
1922-ஸு ஜூலை-மீ 16உ

Vol. 1 பொருளடக்கம். No. 4


| விஷயம். | பக்கம். |
| --- | --- |
| கடவுள் வணக்கம் | 73 |
| குண்டலிசக்தி—வேதாந்தபாஸ்கரன் 2-ம் பாகம் | 74 |
| ஞானத்தம்பட்டம்—மணிமுத்துநாயகம் | 78 |
| கடவுளியல்—வேதாந்தபாஸ்கரன் | 81 |
| உயிர்ப்பிராணிகள் மகாநாடு—காரைச்சிவனடியார் பிரசுரம் | 83 |
| சாதனசதுட்டயம்—வேதாந்தபாஸ்கரன் 2-ம் பாகம் | 85 |
| தமிழ்—R. S. சாம்பசிவசர்மன் | 87 |
| கதை—ப. வீரப்ப தஞ்சவராயன் | 89 |
| முகம்மதுநபி சரித்திரம்—மணிமுத்துநாயகம் | 90 |
| மேழிச்செல்வம்—விளமல் சேஷாத்திரி | 93 |


இப் பத்திரிகையிலுள்ள விஷயங்களை பத்திராதிபர் அனுமதியின்றி எவரும் பிரசுரிக்க அருகரல்லர்.

# "ஞான சூரியன்"

## சந்தா விபரம்.

| | | |
|---|---|---|
| இந்தியா, பர்மா, சிலோன் முதலிய இடங்களுக்கு | வருடம் 1-க்கு தபால்கூலி உள்பட | ரூ 1—8—0 |
| பினாங்கு, சிங்கப்பூர் முதலிய வெளி நாடுகளுக்கு | | ரூ 2—0—0 |
| தனி சஞ்சிகை விலை | | ரூ 0—3—0 |

மாதிரிப் பிரதி வேண்டுவோர் 4 அணா ஸ்டாம்பு அனுப்பி பெற்றுக் கொள்ளலாம்,

சந்தாதாரர்கள் சந்தா நம்பரைக்குறித்து எழுதினாலன்றி கடிதங்களுக்கு விடை யளிக்கப்படமாட்டாது.

சந்தாதாரராய்ச் சேரவிரும்புவோர் வி. பி, யிலனுப்பும்படி ஆர்டர்செய்யலா மேனும் முன் பணம் அனுப்பி விடுவதே உத்தமம். ஏனெனில் மணியார்டர் செய்தால் ரூ 1—8—0: வி. பி. யில் ரூ. 1—11—0 ஆகும். அதனால் தங்களுக்கு 3 அணா சகாயமிருக்கிறது. முதல் சஞ்சிகையிலிருந்து விஷயங்கள் தொடர்ச்சியாய் எழுதப்பட்டுவருவதால் யாவரும ஆரம்பத்திலிருந்தே சேர்ந்து வருகிறார்கள், சந்தா தொகை ரூ. 1—8—0 சித்திரை-மீ முதல்கொண்டு பங்குனி-மீ வரையில் கணக்கு வைத்துக்கொள்ளப்படும். இடையில் சந்தாதாரராய்ச் சேருபவர்களுக்கு சித்திரைமாதப் பத்திரிகைமுதல் சேர்த்து அனுப்பப்படும்.

---

## விளம்பர விகிதம்.

| | | | |
|---|---|---|---|
| ஒரு பக்கத்திற்கு ஒருமாசத்திற்கு | ... | ரூபா | 8—0—0 |
| அரை பக்கத்திற்கு | ,, | ,, | 5—0—0 |
| கால் பக்கத்திற்கு | ,, | ,, | 3—0—0 |

மொத்தமாய் ஒரு வருடத்திற்கு ஒப்பந்தம் செய்துகொண்டால் மொத்தத் தொகையில் 100-க்கு 12½ நூ வீதம் கழித்து வாங்கப்படும் எப்போதும் முழுதொகையை முன்பணமாயனுப்பவேண்டும்,

---

## விஷயங்கள்.

1. கடிதக்காரர்கள் அபிப்பிராயங்களுக்கு பத்திரிகாசிரியர் பொறுப்பாளியல்லா,

2. விஷயம் அனுப்புவோர் கடிதத்தின் ஓரே பக்கத்தில் இங்கியால் தெளிவாய் எழுதியனுப்பினாலன்றி, அவ்விஷயங்கள் கவனிக்கப்படமாட்டா.

3, விஷயங்களை திருத்தவும், அவற்றில் கூட்டவும், குறைக்கவும்; அவற்றை வெளியிடவும் வெளியிடாமலே விட்டுவிடவும் பத்திரிகாசிரியருக்கு பூரண சுதந்திரமுண்டு,

பத்திராதிபர்.

ஸ்ரீ கருணையானந்த மஸ்தான் சுவாமிகள் திருவாய் மலர்ந்தருளியதும் மனிதராகப்பிறந்த ஒவ்வொருவரும் அவசியம் வாசிக்கவேண்டிய யோக ஞான உசனசாஸ்திரமுமாகிய யோகரகசியம்

முழுப்புத்தகம் 1-க்கு ரூ 2—0—0.

கருணையானந்த மஸ்தான் சுவாமிகள்

பத்திராதிபர், ஞானசூரியன் ஆபீஸ்,

விஜயபுரம், திருவாரூர்.

சுயம்பிரகாசத்துணை.

# ஞானசூரியன்.

இது ஒரு சிறந்த மாதாந்தத் தமிழ்ப் பத்திரிகை.

தொட்டனைத் தூறு மணற்கேணி மாந்தற்குக்
கற்றனைத் தூறும் அறிவு. (தமிழ் வேதம்)

(All Rights Reserved.)

| மலர் | | இதழ் |
| --- | --- | --- |
| 1 | துந்துபி-௵ ஆடி-௴ 1உ<br>1922-௵ ஜூலை-௴ 16உ | 4 |

## கடவுள் வணக்கம்.

தேனெனத் தமிழ்சொல் கருணையானந்த
தேசிக வுட்சிதா காய
ஞானசூ ரியன்வந் துதித்தொளி விரிப்ப
நானிலத் துதித்தமா னிடர்கள்
நானெனு மகந்தைக் காரிருட் படலம்
நலிந்தவ ருளமலர் விரியச்
சோனைபோ லருள்செய் சுயம்பிர காசச்
சோதியைப் போதெலாந் தொழுவாம்.

(பத்திரிகாசிரியர்.)

நித்தியமாய் நின்மலமாய் நிட்களமாய் நிராமயமாய்
நிறைவாய் நீங்காச்
சுத்தமுமாய்த் தூரமுமாய்ச் சமீபமுமாய்த் துரியநிறை
சுடரா யெல்லாம்
வைத்திருந்த தாரகமா யானந்த மயமாகி
மனவாக் கெட்டாச்
சித்துருவாய் நின்றவொன்றைச் சுகாரம்பப் பெருவெளியைச்
சிந்தை செய்வாம்.

(தாயுமானவள்ளல்.)

# ஞானசூரியன்.

துந்துபி-ஹூ ஆடி-மீ 1௨


## வேதாந்தபாஸ்கரன் இரண்டாம்பாகம்

## குண்டலிசத்தி.

### விருத்தம்.

தொட்டவர்க் கிசைபயில் சுருதி யாழதின்
வட்டமும் மாசுண வடிவு மார்தருஞ்
சட்டகக் குண்டலி சத்தி தன்மையும்
அட்டமா சித்திகள் அணியு மோதுவாம்.

குறிப்பு:—சீவன்முத்த ரிலக்கணமெனப் பின்வரும் 9-வது அத்தியாயத்தில் குண்டலிசத்தியினது மகிமையாகிய அட்டமாசித்திகளையும் ஞானசத்த பூமிகளையும் விவரிக்கவேண்டியதிருப்பதால் அங்கு விவரிப்பது முறையென்றெனக்கருதி அவற்றையிங்கு வரையலாயிற்று.

### குண்டலியின் இலக்கணம்.

சதநாடிகளென்னும் நூறு (100) நாடிகளின் மத்தியில் மகத்துவந்தங்கிய ஆந்திரவேட்டனிகை யென்னும் பெயருடைய ஒரு நாடியானது வீணை வாத்தியத்தின் அங்கத்திலுள்ள விருத்த வடிவத்தைப்போலவும் நீர்ச்சுழியைப்போலவும் வட்டவடிவமாக சர்வசீவ ராசிகளின் சரீரங்களிலும் பொருந்தியிருக்கும்.

இந்த நாடியானது குளிர்ச்சியை சகிக்கமாட்டாமல் தன்னுடலைச் சுருட்டிக்கொண்டு நித்திரை செய்கிற பெண்சர்ப்பத்தின் வடிவம்போல் கெட்டியாக வளைந்து சதாகாலமும் அசையாமல் பிராணவாயுவினால் நிலைபெற்றிருக்கும். வாழைமரத்தில் தலைகீழாய்த் தொங்கிக்கொண்டிருக்கும் பூவைப்போலிராநின்ற ஆந்திரவேட்டனிகை யென்னும் நாடியினிடத்தில், ஒரு குண்டலி சத்தியானது பரிசுத்தமுடையதாய் ஏனைய சத்திகட்கெல்லாம் வெற்றியைக்கொடுத்து நிற்கும். கோபமிகுந்த பெண் சர்ப்பத்தைப்போல் பெருமூச்சுவிடும். சதாகாலமும் மேல்னோக்கிய வதனத்துடனிருக்கும். நமக்குச் சஞ்சல முண்டாக்குவதற்குக் காரணமாயிருப்பது இந்த குண்டலிசத்தி தான். மனமென்னும்

பேழையைச் சேர்ந்திருக்கின்ற எல்லாநாடிகளும் இந்தக் குண்டலி சத்தியினிடத்தில் இணைக்கப்பட்டிருக்கின்றன.

## குண்டலியின் செய்கை.

இத்தன்மையான குண்டலிசத்தியானது சிந்தனையினால் கலையாகும். சேதனத்தினால் சித்தாகும். மனனத்தினால் மனமாகும். சங்கற்பத்தால் சங்கற்பமாகும். நிச்சய அறிவினால் புத்தியாகும். அகங்காரத்தால் அகங்காரமாகும். இந்தக் குண்டலி சத்தியே *புரியட்டகமென்னும் சூக்கும சரீரமும் ஆகும்.

* புரியட்டக சரீரமானது இலிங்க சரீரமென்னும் சூக்குமசரீரம். இது ஞானேந்திரியங்கள் 5, கன்மேந்திரியங்கள் 5, பிராணபான வாயுக்கள் 5, மனம் புத்தி 2, ஆக இந்தப் பதினேழு அவயவங்களுடன் கூடியது. இந்தச் சரீரம் கண்களுக்குப் புலப்படாமலும் காசாணுநிகளால் பரிசிப்பதற்கு சாத்தியப்படாமலும் தூலசரீரத்திற்குள் இருப்பது.

கைவல்லிய நவநீதம்.

ஆதிமுக்குணமிப்பூசம் அடங்கலும்தொடர்ந்துநிற்கும்
கோதில்வெண்குணத்திலைந்து கூறுணர்கருவியாகும்
ஓதியபின்னைஐந்து உளம்புந்தியிரண்டாம்ஞான
சாதனமாம் இவ்வேழும் சற்குணப்பிரிவினாலே.

இராசதகுணத்தில்வேறிட் டெடுத்தகூறைந்தும்ஐந்தும்
பிராணவாயுக்களென்றும் பெருந்தொழிற்கன்மமென்றும்
பராவியபெயராமிந்த பதினேழுமிலிங்கதேகம்
சராசரங்களாய்விலங்காய்த் தோன்றியஉயிர்கட்கெல்லாம்.

இந்தச்சூக்கும சரீரத்திற்கு 8 தத்துவம் அல்லது 8 கொத்துகொண்டதாதலால் புரியட்டகமென்று பெயர் வந்தது. 8 தத்துவங்களாவன:— சத்தமுதலான தன்மாத்திரைகள் 5, மனம்-புத்தி-அகங்காரம் 3, ஆக தத்துவம்-8. எட்டுகொத்தின் விபரம்:—பூதம் ஒரு கொத்து, தன்மாத்திரை ஒருகொத்து, கன்மேந்திரியம் ஒருகொத்து, ஞானேந்திரியம் ஒருகொத்து, அந்தக்கரணம் ஒருகொத்து, சத்துவாதி முக்குணம் ஒருகொத்து, பிரபஞ்ச மூலமாயிருக்கும் மாயப்பிரகிருதி ஒருகொத்து, கலாதி ஒருகொத்து ஆக கொத்து 8 என்று சிவஞான சித்தியார் முதலிய நூற்கள் கூறுகின்றன.

குண்டலிசத்தியென்னும் சிவசத்தியானது சரீரத்துட் கலந்திருக்கும் பிராண அபான வாயுக்களினது ரூபமாகிக் கீழிலும் மேலிலும் போக்குவரவாகி நிற்கும்; தானே சமஸ்தமுமாகி ஊர்த்தமுகத்திற் சென்றாலும் செல்லும். அதோமுகத்தில் திரும்பினாலும் திரும்பும். இஃதே சீவனாகி முடிவில் மரணத்தையடையும் பிராணவாயுவுமாகும். இந்தக் குண்டலிபிராண சலனமின்றிப் போக்குவரவின்றி அசைவற்று நிலைபெற்று நிற்கில் பிராணவாயுவானது அகத்திற் சேர்ந்து சீவர்கட்கு வியாதி யென்பதே வாராமற் காக்கும்.

## குண்டலி விழிப்பு.

விடய இச்சையைத்தரும் சகல போக போக்கியங்களையும் அசத்தென்றறிந்து பஞ்சேந்திரியங்களை யொடுக்கி, ஏகாந்தமான இடத்தில் சுகாசனத்திலிருந்து இரேசக பூரகமாக இயங்கிக் கொண்டிருக்கும் வாயுவை மேல்நோக்குமாறு குருமூர்த்தி மனங்கனிந்து உபதேசித்தருளிய மார்க்கப்படி அப்பியாசித்து, நிரோதனஞ்செய்து, கும்பித்திருந்து சிங்கைப் பங்கஞ்செய்யாமல் மடித்து மேல்வீட்டு வாயலில் காக்கவைத்துக் குதமுதலாய நவத்துவாரங்களிலும் வாயுவைப் போகவிடாமல் அடைத்து, ஓசைமணி மண்டபத்தில் யோகநித்திரை செய்துகொண்டிருக்கும் கமலசத்தியினது வீட்டுத்தலைவாசல் கபாடத்தை தாலமென்னுந் திறவுகோல்கொண்டு திறந்து, பிராண வாயுவைச் சுழிமுனையில் நிறுத்தி முக்கோண வடிவமாக இருக்கின்ற மூலாதார முதலான ஆறாதாரங்களை யறிந்து, அந்தந்த ஆதாரங்களுக்குரிய பதுமதளங்கள், அத்துவாமூர்த்திகள், அக்கரங்கள் முதலியவைகளை

---

மதயானைபசித்த விளாங்கனியானது, மலத்துடன் விழும்போது முன்போல் உண்மையான பழம்போலவே தோன்றினும், அதன் மாதுரியமான சத்துக்களெல்லாம் கிரகிக்கப்பட்டிருப்பதுபோலும்; அக்கினியில் வெந்த காகிதம், வஸ்திர முதலியவைகள் பழைய எதார்த்த வடிவம்போல் புலப்படுவதுபோலும்; சூக்கும சரீரிகளான முமூட்சுக்களானவர்கள் பார்வைக்குத் தூலதேகியைப்போற் காணப்படினும், அவர்கள் சூக்கும சரீரிகளே யாவார்கள்.

வேதாந்தபாஸ்கரன் முதற்பாகம் ஆறுதாரமென்னும் சத்த சக்கர அத்தியாயங்களில் கூறியிருக்கின்ற விபரப்படி நன்கு உணர்ந்து தியானித்து, குண்டலிசத்தியை விழிப்பித்து மூலக்கனலை மதி மண்டலத்திற் செலுத்தி இடகலையிலிருந்து ஒழுகும் சந்திரபுட்கரணியென்னும் மதியமிர்த பானஞ்செய்து ஏனைய ஆதாரங்களில் அதோமுகமாகத் தொங்கிக்கொண்டிருக்கும் பதுமங்களைப் பேதித்து மேலேசென்று விந்துத்தானத்தின் வழியாக இறங்கி மதியமிர்த தாரையை சரீரமுழுவதும் நிறையச்செய்த யோகானுபவிகட்குக் கைவல்லியமாவதன்றி யேனையோர்கட்கு ஒருபோதுஞ் சித்தியாது. யோகிகள் அரியபெரிய முயற்சியெடுத்துச் சரீரத்தை வருத்திப் பிரயாசப்படுவதெல்லாம் குண்டலிசத்தியை விழிப்பித்தற் பொருட்டேயன்றி வேறல்ல. ஆகையால் குண்டலியை நித்திராபங்கம்பண்ணி விழிக்கச் செய்தவர்களுக்கே சகல சித்திகளின் வல்லமைகளுண்டாகும்.

ஓர் பெரிய ஆலவிருட்சம் நிலைபெற்று நிற்பதற்கு அதன் வேர் ஆதாரமாயிருப்பதுபோல் சகல யோகாப்பியாசங்களுக்கும் குண்டலிசத்தியே ஆதாரமாயிருக்கின்றது. குண்டலி விழித்தாலன்றிச் சகல யோகோபாயங்களும் விபர்த்தமாகும். குண்டலி விழித்தவுடன் ஆறுதாரமுதலிய சகல சக்கரங்களிலுமுள்ள பதுமங்கள் பேதத்தை யடைகின்றன. பூட்டிய வீட்டைத் திறவுகோல்கொண்டு திறப்பதுபோல் தாலாப்பியாசத்தால் மோட்சத் துவாரமென்னும் பிரமரந்திரத்தின் சுழுமுனை மார்க்கத்தைத் திறக்கவேண்டும். வேதாந்த பாஸ்கரன் முதற்பாகமாகிய ஞான சூரியன் 2-வது பதிப்பில் தசநாடிகள் அத்தியாயத்தில் விவரித்திருக்கிற கந்தத்தின் மேற்பாகத்தில் குண்டலியானது யோகிகளுக்கு மோட்சத்தின்பொருட்டும் சாமானியர்களுக்கு பந்தத்தின் பொருட்டும் தூங்குகின்றது. யோகிகள், மேல்வாசலைத் திறக்காதபடி தனது முகத்தால் மூடிக்கொண்டு தூங்குகிற சர்ப்பவடிவமுள்ள குண்டலியை வாலைப்பிடித்து எழுப்பவேண்டும். இந்த இரகசியத்தைக் குருமுகமாகக் கேட்டபடி தினந்தோறும் காலை மாலை இரண்டுவேளைகளிலும் சுமார் அரைச்சாமம் (1-30 மணி)

நேரம் சாலனம் செய்யவேண்டும். அதனால் காசம், சுவாசம், சுரம் முதலிய வியாதிகள் நிவர்த்தியாகின்றன. அதன்பின் பஸ்திரிகை யென்னும் கும்பகத்தை அப்பியாசித்துக் குண்டலி சத்தியை விழிப்பிக்கவேண்டும். இப்படிச் செய்வதால் ஒரு மண்டலத்தின்மேல் பிராணயாமம் சித்தியாகின்றது. சத்திசாலனமென்னும் குண்டலியப்பியாசத்தால் எழுபத்தீராயிர நாடிகளும் மலசுத்தி யடைகின்றன.

---

## ஞானத்தம்பட்டம்.



திடும்! திடும்!! திடும்!!!

பல வருடங்களுக்கு முன் திருவாரூரில் ஜஞானந்தன் என்னுமோர் அரசன் செங்கோல் செலுத்தி வந்தான். அக்காலத்தில் நாடெங்கும் கள்ளர்கள் பயம் அதிகரித்திருந்தமையால் ஜனங்கள் எச்சரிக்கையாக இருக்கும்பொருட்டு இரவில் நான்கு சாமங்களிலும் பறையறிவிக்குமாறு கட்டளையிட்டான். அவ்வாக்கையைச் சிரமேற்கொண்டு சுமுகன் என்பவன் ஒவ்வொரு இரவிலும் சாமங்கள்தோறும் தவறாது பறையடித்து, "ஜனங்களே! ஜாக்கிரதையாக இருங்கள்! ஜாக்கிரதையாக இருங்கள்!!" என எச்சரிக்கை செய்துவந்தான்.

ஒருநாள் சுமுகன் அவசர காரியநிமித்தம் வெளியூர்போக நேரிடவே, வெகுகாலமாக வாய்பேசாமலிருந்த தன் குமாரனை தனக்குப் பதிலாக பறையடிக்குமாறு நியமித்துவிட்டுச் சென்றனன். அன்றிரவு ஊமையன் பின்வருமாறு பறையடிக்கலானான்.

### 1 - வது சாமம்.

அகவல்,

உலகத்தீரே! உலகத்தீரே!!
நாக்கடிப்பாக வாய்ப்பறையறைந்து
சாற்றக்கேண்மின்! சாற்றக்கேண்மின்!!
மனிதர்க்குவயது நூறல்லதில்லை

ஐம்பதிரவில் அகலுந்துயிலினுல்
ஓட்டியஇளமையால் ஓரைந்துநீங்கும்
ஆக்கையிளமையில் ஐம்மூன்றுநீங்கும்
எழுபதுபோகநீக்கு இருப்பனமுப்பதே

(அவற்றுள்)

இன்புறுநாளும் சிலவேஅதாஅன்று
துன்புறுநாளும் சிலவேயாதலால்
பெருக்காறொத்தது செல்வம்பெருக்காற்று
இடிகரையொத்தது இளமையிடிகரை
வாழ்வாமொத்தது வாழ்நாளாதலால்
ஒன்றேசெய்யவும் வேண்டுமவ்வொன்றும்
நன்றேசெய்யவும் வேண்டும்நன்றும்
இன்றேசெய்யவும் வேண்டும்அவ்வின்றும்
இன்னேசெய்யவும் வேண்டும்அவ்வின்னும்
நாளைநாளை யென்பீராகில்
நம்முடையமுறைநாள் ஆவதும்அறியீர்
நமனுடையமுறைநாள் ஆவதும்அறியீர்
எப்போதாயினும் கூற்றுவன்வருவான்
அப்போதந்தக் கூற்றுவன் தன்னைப்
போற்றவும்போகான் பொருளொடும்போகான்
சாற்றவும்போகான் தமரொடும்போகான்
நல்லாரென்னுன் நல்குரவறியான்
தீயாரென்னுன் செல்வரென்றுன்னுன்
தரியாதொருகணம் தறுகணாளன்
உயிர்கொடுபோவான் உடல்கொடுபோகான்.

ஆகையால் நமது மஹாஜனங்களே! எமனென்னும் கள்வன் உயிர் என்னும்பொருளை கவர்ந்துபோக முயற்சித்து ஒவ்வொரு காலையும் எதிர்பார்த்தவண்ணமா யிருக்கின்றான். நீங்கள் அவனிடம் அகப்பட்டுக்கொள்ளாம லிருப்பதற்கு அஞ்ஞான நித்திரையைப் போக்கி மெய்ஞ்ஞான விழிப்பை அடைந்து ஜாக்கிரதையாக இருங்கள். திடும்! திடும்!! திடும்!!!

### எண்சீரடியாசிரிய விருத்தம்.

கட்டோடேகனத்தோடே வாழ்கின்றோமென்பீர்
கண்ணோடேகருத்தோடே கருத்தனைநீர்கருதீர்
பட்டோடேயணியோடே திரிகின்றீர்தெருவில்
பசியோடேவந்தாரைப் பார்க்கவுநேரீர்
கொட்டோடேமுழக்கோடே கோலங்காண்கின்றீர்
குணத்தோடேகுறிப்போடே குறிப்பதைக்குறியீர்
எட்டோடேயிரண்டுசேர்த் தெண்ணவுமறியீ
ரெத்துணைகொள்கின்றீர் பித்துலகீரே. (1)

ஆறுமலவியாம லடைந்தசோபத்தி
யடர்வுறவுலகிடை யஞ்சாதுதிரிவீர்
மாறுமல்மனஞ்சென்ற வழிசென்றுதிகைப்பீர்
வழிதுறைகாண்கிலீர் பழிபடும்படிக்கே
நாறுதமலர்போலும் வாழ்கின்றீர்மூப்பு
நரைதிரைமரணத்துக் கென்செயக்கடவீர்
ஏறுமல்வீணிலே யிலங்குகின்றீரே
யெத்துணைகொள்கின்றீர் பித்துலகீரே. (2)

ஆயாமையாலேநீ ராதியநாதியாகிய
சோதியையறிந்து கொள்கில்லீர்
மாயாமைபிறவாமை வழியொன்றுமுணரீர்
மறவாமைநினையாமை வகைசிறிதறியீர்
சாயாமைபழுக்கின்ற கருத்தையுங்கருதீர்
கண்மூடித்திரிகின்றீர் கனிவோடுமிரப்போர்க்
கீயாமையொன்றையே யின்றுணையென்பீ
ரெத்துணைகொள்கின்றீர் பித்துலகீரே. (3)

சாமாந்தராகாத சாஞ்சிறிதுணரீர்
தத்துவஞானத்தை யிற்றெனத்தெரியீர்
மாமாந்தநோயுற்ற குழவியிற்குழைந்தீர்
வாழ்க்கையிலற்ப மகிழ்ச்சியும்பெற்றீர்
காமாந்தகாரத்திற் கண்மூடித்திரிவீர்
கற்பனகற்கிலீர் கருத்தனைக்கருதா
தேமாந்துதூங்குகின்றீர்விழிக்கின்றீ
ரெத்துணைகொள்கின்றீர் பித்துலகீரே. (4)

(இன்னும் வரும்) (மணிமுத்துநாயகம்)

## கடவுளியல்.

32-ம் பக்கத் தொடர்ச்சி.

கதவு, நிலை, சன்னல் முதலியவைகளை ஓர் தச்சுவேலைக்காரன் இருந்து செய்திருப்பானேயன்றி, அவைகள் தானாகவே அந்தந்த ரூபங்களை அமைந்திருக்கமாட்டாது. அதுபோல் யானைமுதல் எறும்பீறாக * எழுவகைத் தோற்றத்திலுண்டான §எண்பத்துநான்கு லட்சம் சீவராசிகளையும், கடல், மலை முதலியவைகளையும், *சிருட்டி, திதி, சங்காரம், திரோபவம், அநுக்கிரகம் என்னும் பஞ்சகிருத்தியங்களைச் செய்யும் கடவுள் என்னும் ஓர் தேவதச்சன் இருந்து செய்திருக்கவேண்டுமேயன்றி, அவைகள் இயற்கையாகவே அமைந்திருக்கமாட்டாது.

---

* எழுவகைத் தோற்றம்:—தேவர், மக்கள், விலங்கு, புள், ஊர்வன, நீர்வாழ்வன, தாவரம்.

§ 84 இலட்சம் சீவராசிகளாவன:—தேவர் (மலாயீக்கத்துகள்) 14 இலட்சம்; மக்கள் 9 இலட்சம்; விலங்கு 10 இலட்சம்; புள் 10 இலட்சம்; ஊர்வன 11 இலட்சம்; நீர்வாழ்வன .10 இலட்சம்; தாவரம் 20 இலட்சம்,

* சிருட்டி-படைத்தல், திதி-காத்தல், சங்காரம்-அழித்தல், திரோபவம்-மறைத்தல், அநுக்கிரகம்-அருளல்.

இப்பஞ்ச கிருத்தியங்கள். பெத்தத்தில் நிகழும் பஞ்சகிருத்தியங்களென்றும், முத்தியில் நிகழும் பஞ்சகிருத்தியங்களென்றும் இருவகை. அவற்றுள், பெத்தத்தில் நிகழும் பஞ்சகிருத்தியங்கள், இந்திரியங்களில் வருவனவென்றும், கரணத்தில் வருவனவென்றும் இருபாகுபடும்,

1 இந்திரியக் கிருத்தியங்களாவன:—ஓர் இந்தியத்தில் ஆன்மா பிரவேசித்தல் சிருட்டி அவ்விந்தியத்திலிருந்து ஓர் விடயத்தைப்பற்றி அநுபவித்தல் திதி, அவ்விடயத்தின் மயமாக இரண்டற அழுந்துதல் சங்காரம், அதில் இதம்பிறத்தல் திரோபவம், அதனைத் தெளிந்துகோடல் அநுக்கிரகம்.

2 கரண கிருத்தியங்களாவன:—மனதினால் ஒருபொருளை நினைத்தல் சிருட்டி, அப்பொருளிற் பிரியம் பிறத்தல் திதி, அஃது எப்போது வருமெனத் திகைத்துநிற்றல் சங்காரம், அப்பொருளின் மயங்குதல் திரோபவம், அதனைத் தெளிந்துகோடல் அநுக்கிரகம்,

கடவுள் சர்வ *சராசரப் பொருள்களிலும் அங்கு இங்கு என்று சுட்டிச் சொல்லாத விதமாய் எங்கும், பூவில் வாசமும், எள்ளில் எண்ணெயும், பாலில் நெய்யும், உடலில் உயிரும், ஆகாயத்தில் வாயுவும், மண்ணில் சலமும், தாய்வயிற்றில் சிசுவும், நீரில் உப்பும், எப்படி அபேதமாய்க் காணப்படுகிறதோ, அப்படியே (சர்வேந்தரியாமியாகியவராதலால்) நிர்விகற்பமாய் வியாபித்திருக்கின்றார்.

திருவருட்பா.

பெருகியபேரருளுடையார் அம்பலத்தேநடிக்கும்
பெருந்தகையென்கணவர்திருப் பேர்புகலென்கின்றாய்
அருகர்புத்தராதியென்பேன் அயனென்பேன்நாரா
யணனென்பேன்அரனென்பேன் ஆதிசிவனென்பேன்
பருகுசதாசிவனென்பேன் சத்திசிவனென்பேன்
பரமமென்பேன்பிரமமென்பேன் பரப்பிரமமென்பேன்
துருவுசுத்தப்பிரமமென்பேன் துரியநிறைவென்பேன்
சுத்தசிவனென்பனிவை சித்துவிளையாட்டே.

வேதாந்தபாஸ்கரன். (தொடரும்.)

---

மூத்தி கிருந்தியங்களாவன:- முத்தியில் அருள்வடிவமாதல் சிருட்டி, ஆனந்தப்பேறு பெறுதல் திதி, அதில் அதீதப்படல் சங்காரம், ஞாதுரு ஞானஞேயமாகிய திருக்குத்திரிசிய விவேகமென்னும் மூன்றும் தோன்றாதிருத்தல் திரோபவம், இந்த நான்கு கிருத்தியங்களும் எக்காலமும் விளங்குதல் அநுக்கிரகம்,

அன்றியும் 36 கருவிகளோடும் ஆன்மா தேகபோகங்களை யறிந்து நிற்றலால், சாக்கிரத்தைச் சிருட்டியெனவும்; இச்சாக்கிரத்திற் புசித்த வாசனை சொப்பனத்தும் அறிந்துநிற்றலால் திதியெனவும்; இச்சொப்பனம்போற் சிறிது நிழலெழத்தோன்றி மறைதலால் சுழுத்தியைச் சங்காரமெனவும்; பிராணவாயு இயக்கமின்றி ஒன்றுந் தோன்றாதிருத்தலால் துரியத்தைத் திரோபவமெனவும்; அதீதம், சருவிகள் எதுமின்றி ஆணவவிருளை யிருந்ததாயினும், அதன் நிமித்தமாய் மாயையில் தநுவாதிகொடுத்தல், இருவினையொப்பு வருவித்தல், ஆசாரிய மூர்த்தமாய் வந்து உபதேசித்தல் முதலிய அநுக்கிரகம் பெறுதலால், இவ்வதீதத்தை அநுக்கிரகமெனவும் கூறுவதுண்டு.

* சரம் . இயங்குவது, அசரம்-இயக்கமின்றிநிற்பது, சரம் - அசரம் என்பது சராசரம் என்றாயிற்று.

# மனிதர் வாய்ப்படும் அகில உலக உயிர்ப்பிராணிகள் மகாநாடு.

---

மயிலாடு பாறையில் சத்ய வருஷம் தைமாதம் பன்னிரண்டாந்தேதி பகல் மூன்றுமணிக்கு மகாநாடு (கான்பரன்ஸ்) நடப்பதற்கு வேண்டிய ஏற்பாடுகள் செய்யப்பெற்றன. அழகான அலங்காரக் கொட்டகை போடப்பட்டிருந்தது. அதிற் பல பக்கங்களிலும் கொடிகள் கட்டப்பட்டும் தோரணங்கள் நாட்டப்பட்டும் பார்ப்பவர் கண்ணைக் கவர்ந்துகொண்டிருந்தன. சுற்றும் பிரதிநிதிகளுட்கார இடம்விட்டு நடுவில் அக்கிராசனருக்கும் உபந்யாசம் புரிவதற்கும் ஒரு பெரிய மேடை போடப்பட்டிருந்தது. வெளிவாசலில் "பிறருக்குத் துன்பமிழைப்பதே பெரும்பாவம். பரோபகாரமே பிறப்பின் பயன்" என்று எழுதப்பட்டிருந்தது. குறித்த தினத்தன்று காலையிலிருந்தே பிரதிநிதிகள் வந்துகொண்டிருந்தார்கள். பகல் ஒரு மணிமுதல் பல உலகங்களிலிருந்தும் வரிசை வரிசையாக விமானங்கள் வந்துகொண்டிருந்தன. சரியாக மூன்று மணிக்கு அக்கிராசனரையும் பிரபலஸ்தர்களையும் ஊர்வலமாக அழைத்துவந்தார்கள். அப்பொழுது பிரமாண்டமான அந்தக் கொட்டகையில் எவ்வளவும் இடமில்லாது பிரதிநிதிகளும் விஸிட்டர்களும் நிறைந்திருந்தார்கள். பெருந்த கரகோஷத்தினிடையில் அக்கிராசனரும் மற்ற பிரமுகர்களும் அங்கு வரவேற்கப் பெற்றார்கள். ஆடு, கோழி, பன்றி, முயல், மான், பசு, எருமை, எலி, உடும்பு, புறா, காசுக்கட்டுக்குருவி, கனிதின்னும் வௌவால் முதலிய, மனிதர்களால் கொன்று தின்னப்படும் பிராணிகள் திரண்டு கொட்டகை நிறையக் குழுமியிருந்தார்கள்.

சிவபெருமானுக்கு நெடுங்காலமாக வாகனமாகவும் கொடியாகவுமிருந்து விளங்கிவரும் ரிஷபதேவரும் சிவபெருமானது திருக்கரத்தில் பொலிந்து விளங்கும் திருமான் புலவரும் விநாயகரது வாகனமான மூஷிகப் பிரபுவும் கந்தக்கடவுளது வாகன

மும் கொண்டையுமான ஆடப்பதேவரும் கோழியப்பநாயனாரும் யமதருமருடைய ஊர்தியான ஸ்ரீ எருமையண்ணனாரும் இந்திரனுடைய செல்வப்பேறான காமதேநு நாச்சியாரும் வேறு பல பிரமுகர்களும் அக்கூட்டத்திற்கு விஜயஞ் செய்திருந்தார்கள். கூட்டம் ஆரம்பிக்கப்பெற்றது. மன்மதனுடைய வாகனமான பஞ்சவர்ணக்கிளியெழுந்து கேட்டோர் செவியினிருக்குமாறு கடவுள் வாழ்த்துக் கூறியது. உடனே அங்கு கம்பீரமாக முன்னணியில் வீற்றிருந்த ஸ்ரீலஸ்ரீ ரிஷபதேவர் எழுந்து உலகத்திலே ஜனங்களால் மிகுதியும் துன்புறுத்தப்படுவதில் ஆடப்ப தேவரின் கோத்திரத்தாரே முதன்மை பெற்றிருப்பதாலும் கலியுக வரதரான ஸ்ரீசுப்பிரமணியக் கடவுளரது ஊர்தியாக விருப்பதாலும் அவரையே அக்கிராசனத் தமர்த்த வேண்டுமென்று பிரேரணை செய்தார். யாவரும் பெருத்த ஆரவாரஞ்செய்ய அப்படியே ஸ்ரீமான் ஆடப்பதேவர் அக்கிராசனத் தமர்ந்து தமது முகவுரைப் பிரசங்கத்தைப் பின்வருமாறு செய்தார்:—

எனது அரிய சகோதரர்களே! இந்தப் பெரிய கூட்டத்திற்கு ஸ்ரீலஸ்ரீ ரிஷபதேவர் முதலிய பெரிய பெரிய தலைவர்கள் விஜயஞ் செய்திருப்பதற்கு நான் மிக்க சந்தோஷமடைகின்றேன். நீங்கள் எல்லாரும் இங்கு நிறைந்திருப்பதானது இந்தக் கூட்டம் எவ்வளவு அவசியமானதென்பதையும் உங்கட்கு இதிலிருக்கும் ஊக்கத்தையும் இனிது விளக்குகிறது. நிற்க, இந்த உலகம் உண்டான காலம் முதலாக நாளதுவரைக்கும் நாம் கௌரவமாகவும் பெருந்தன்மையோடும் பலர் மதிக்க வாழ்ந்து வருகிறோம். நம்மவரிற் பலரும், சிவபெருமானுக்கும் பெருமாளுக்கும் விநாயகர், கந்தக்கடவுள், பிர்மா, தர்மராஜன் முதலிய பெரிய தெய்வங்கட்கும் வாகனங்களாகவும் கொடிகளாகவுமிருந்து பெருமையடைந்து வருகிறோம். உலகத்திலுள்ள ஜனங்கட்கும் பேருபகாரஞ்செய்து வருகிறோம். இன்னும் பன்னிரண்டு ராசிகளிலிருந்து உலகத்திலிருக்கிற ஜனங்கட்கு ஜோதிட சாஸ்திர

(காரைச் சிவனடியார் திருக்கூட்டத்தின் துண்டுப் பிரசுரத்திலிருந்தெடுத்துப் பிரசுரிக்கப்பெற்றது.)

(இன்னும்வரும்.)

## சாதனசதுட்டயம்.

### சங்கிரகம் (SUMMARY)

(37-ம் பக்கத் தொடர்ச்சி)

(1) நித்திய வஸ்துவாகிய ஆத்துமாவானது நாசமின்றியதும், எவ்விதக் கிரியையின்றியதும் என்றும்; அநித்தியமாகிய பிரபஞ்சமானது நாசமுள்ளதும், கிரியையுடையதும் என்றும் அறிவதற்கு விவேகம் என்று பெயர். பிரம்மரூப ஆத்துமாவை நான் அறிந்தேன் என்பது ஞானம். நான் அறியேன் என்பது அஞ்ஞானம். இது தத்துவஞானப் பயிற்சியால் நிவர்த்தியாகும். இவ்விதமாக நிவர்த்தியான ஞானவிவேகமே சகல சாதனங்களுக்கும் இன்றியமையாத ஆதாரம், ஏனெனில் விவேகமுண்டாகாவிடின் ஏனைய சாதனங்கள் மூன்றும் சோபிக்கமாட்டா.

அன்னப்பட்சியானது பாலையும் அதிற் கலந்த நீரையும் பிரிக்கின்ற தன்மைபோல், ஆத்துமாவையும் அநாத்துமாவையும் பிரித்தறிதல் விவேகம். இவ்விவேக மாத்திரத்தால் பிரபஞ்சம் மித்தையென்னும் * பரோட்சஞான முண்டாகுமேயன்றி அபரோட்சஞான முண்டாகாது. ஆதலால் மேற்கூறிய மூன்று சாதனங்களும் அவசியம் வேண்டும்.

---

* பரோட்சம் அபரோட்சம் என்பது வேதாந்த நூற்களின் தாத்பரிய நிச்சய ரூபமாகிய சிரவணத்தைக் குருமுகத்தால் கேட்டும் அதற்கனுசாரமாய் மனனமும்; மனனனுசாரமாய் நிதித்தியாசனமும் செய்தால் பிறகு சச்சிதானந்த பிரம்மமே நான் என்ற ஞானமுண்டாகும்; இதுவே பரோட்சஞானம். இந்த பரோட்ச ஞானங்களைப்பற்றிய காரியங்களைச் செய்யாதவனாகியும், நான் கருத்தா முதலாய அபிமானத்தை விட்டவனாகியும், பிரம்மமே நானாக இருக்கின்றேனென்ற அனுபவத்தையும் விட்டவனாகியும் அதுவிஷயமான பிரயத்தனத்தையும் சுழுத்தி அவத்தையிலிருப்பதுபோல பற்றற்ற சுபாவமாகிய மௌனவத்தையில் நீரில் உப்புக் கரைந்தாலெப்படியோ அப்படி பிரம்மத்திலிரண்டறக் கலந்துபோன அந்தக்கரணத்தை யுடையவனாயும், நிர்விசேட நிலைமையிலிருக்கின்றவனுக்கு நிர்விசேட ஞானமெதுவோ அது தானாகவே உண்டாகின்றது. இதுதான் அபரோட்சானுபவம். இந்த அனுபவம் எப்பொழுது உண்டாகின்றதோ அப்பொழுது அவன் சுவானுபவரூபனும் ஆனந்த சொரூபனு

வேதமோதுதற்குப் பிராமணனும், அரசுபுரிவதற்கு சத்திரியனும், வர்த்தகம் செய்வதற்கு வைசியனும், உழவு தொழில் முதலியன செய்வதற்கு சூத்திரனும் எங்ஙனம் அதிகாரியோ அங்ஙனமே வேதாந்த விசாரத்துக்கு இந்த நான்கு சாதனங்களின் நெறியைப் பூண்டொழுகுபவனே அதிகாரியாவன்; ஆனல் கல்வி ஞானமட்டும் உடைய வித்துவான்கள் அதற்கு அருகசல்லர். ஏன்?

கல்லாதபேர்களே நல்லவர்களல்லவர்கள்
    கற்றுமறி வில்லாதவென்
கர்மத்தையென்சொல்வேன் மதியையென்சொல்லுவேன்
    கைவல்ய ஞானநீதி
நல்லோருரைக்கிலோ கர்மமுக்கியமென்று
    நாட்டுவேன் கன்மமொருவ
னுட்டிலோபழைய ஞானமுக்கியமென்று
    நவிலுவேன் வடமொழியிலே
வல்லானொருத்தன்வர வுந்த்ராவிடத்திலே
    வந்ததா விவகரிப்பேன்
வல்லதமிழறிஞர்வரி னங்ஙனேவடமொழியின்
    வசனங்கள் சிறிதுபுகல்வேன்
வெல்லாமலெவரையு மருட்டிவிடவகைதந்த
    வித்தையென் முத்திதருமோ
வேதாந்தசித்தாந்த சமரசநன்னிலைபெற்ற
    வித்தகச் சித்தர்கணமே. (இன்னும்வரும்.)

---

மாகின்றான். அந்த ஆனந்த வைபவத்தை அவனன்றி ஏனையோர்களாலும் வேதாந்த சித்தாந்த சாத்திரங்களாலும் மனோவாக்குகளாலும் அறிய முடியா. ஞானத்திற்கு சாதனம் வேதாந்த வாக்கியமாம், அது அவாந்தர வாக்கியம், மகாவாக்கியமென இருவகையாம். அவற்றுள்:—பரமான்மாவினது அல்லது சீவனது சொரூபத்தை அறிவிக்கும் வாக்கியம் அவாந்தர வாக்கியமென்றும், சீவ பரமான்மாக்களின் ஏகத்துவத்தை அதாவது சீவப் பிரம்மைக்கியத்தை அறிவிக்கும் வாக்கியம் மகாவாக்கியமென்றும் பெயர். அவாந்தர வாக்கியத்தால் பரோட்சஞானமும் மகாவாக்கியத்தால் அபரோட்சஞானமும் உண்டாகும், பிரம்மம் இருக்கிறது என்னும் ஞானமே பரோட்சமென்றும் பிரம்மம் நான் என்னும் ஞானமே அபரோட்சமென்றும் பெயர்பெறும்.

# தமிழ்.

## காப்பு.

நந்தமொன்றேய்கரும் குன்றையன்பார்த்துப்
புந்திவெண்பாற்கடல் நாட்டுதூஉஞ்
செந்தமிழமிர்தந் திரண்டெழற்பொருட்டே.

தமிழன்பர்காள்!

ஆழிசூழ் உலகில் பல்வேறு பிறவிகள் எடுத்துழன்று, அவ்வப்பிறவிகளில் புரிந்த தவப்பயனாய் இம்மானிட யாக்கையைப் பெற்றுள்ளோம். இதனை;

"புல்லாகிப்பூடாய்ப் புழுவாய்மரமாகிப்
பல்விருகமாகிப் பறவையாய்ப்பாம்பாகிக்
கல்லாய்மனிதராய்ப் பேயாய்க்கணங்களாய்
வல்லசுரராகி முனிவராய்த்தேவராய்ச்
செல்லாநின்றவித் தாவரசங்கமத்துள்
எல்லாப்பிறப்பும் பிறந்திளைத்தேன்" (என்பர் மணிவாசகரும்)

ஆதலின் மானிடப்பிறவி எடுத்தல் அரிது. இதனை நம் நரைமூதாட்டியும்,

"அரிதுஅரிது மானிடராதலரிது" என்பர்.

இவ்வாறு மானிடப்பிறவி எடுத்தலினும், உத்தமகுலத்தில், மேலான பூமியில், உயர்ந்த நாட்டில் பிறத்தலரிது. இதனை;

"நார்பயில்தேயம்தன்னில் நான்மறைபயிலாநாட்டில்
விரவுதலொழிந்துதோன்றல் மிக்கபுண்ணியத்தனாகும்
தரையினிற்கீழைவிட்டுத் தவஞ்செய்சாதியினில்வந்து
பரசமயங்கட்சேரா பாக்கியம்பண்ணொண்ணாதே."

என்பர் சித்தியாரும். நறுந்தொகையில்,

"சான்றோரில்லாத் தொல்பதியிருத்தலின்
தேன்றேர்குறவர் தேயம்நன்றே."

என்று கூறப்பட்டிருக்கிறது. இவ்வாறு பிறந்தும் கூன், குருடு, ஊமை முதலிய நீங்கி முக்கணீசனுக் காட்படல் அரிதாகும். இதனை வள்ளலார், பசுபதிபாச விளக்கத்தில்,

"மக்கள்யாக்கையில்பிறத்தலு மரிதுமற்றதனில்
துக்ககூன்குருடூமைமைத் துறத்தலுமரிது
நற்குலத்திடைவருதலு மரிதுஞானத்தாள்
முக்கணீசனுக்காட்படல் மூற்றிலுமரிதே."

தமிழன்பர்களே! மேற் கூறியவாறு நன்னாட்டில், நற்குலத்தில், அங்கவூனமின்றி பிறந்த நாம் செய்யவேண்டிய கடமைகள் பலவுள. அவைகளில் முக்கியமானது நாம் வீட்டிலும் வெளியிலும் பேசிவரும் பாஷையைப் பற்றியே என்பது வெளிப்படை. நாம் இவ்வுலகத்தில் பிறந்தது எதன்பொருட்டென்னில் தொண்டு செய்தலின் பொருட்டே என்பது தெளியப்படும். தொண்டு என்பதை ஐந்து வகையாகப் பிரிக்கலாம். 1 ஈசத்தொண்டு, 2 தாசத்தொண்டு, 3 தேசத்தொண்டு, 4 பாசத்தொண்டு, 5 ஆபாசத்தொண்டு. இவை ஐந்தில் நடுநாயகமானதும் தற்காலத்திற்கு வேண்டுவதுமான தேசத்தொண்டிற்கு முதன்மையானது பாஷாபிமானம். ஆகலின் இதுபொழுது நமது தாய் பாஷையாகிய "தமிழ்" என்பதைப் பற்றியும், தமிழ் நாட்டைப்பற்றியும், தமிழ் நூல்களைப் பற்றியும் சிறிது தெளிய ஆராய்வாம். ஈசனும் அருள்புரிவாராக:—

பல்வேறு பாஷைகளுக்குள் மக்கள்களுக்கு இருகண்களையொப்ப மிக்கப் புகழ்பெறும் பாஷைகளிரண்டே. அவைகள் ஆரியமும், தமிழும் ஆகும். இவ்விரண்டும் அரும் பெருந்நூல்களைத் தனதிடத்தடக்கிக்கொண்டு, தெய்வத்தன்மையுடையதாய், இனிமை வாய்ந்து, கற்போர்க்கு நீதிகளைப் புகட்டி, அவரை நல்வழிப்படுத்தி, சாந்தகுணத்தைப் பற்றும்படிக்கு அவர்கள் நெஞ்சகத்தில் பறையறைந்து மேன்மைப்படுத்தும் தன்மையுடையன. தமிழ் என்னும் இம்மொழியை மட்டிலும் ஈண்டு எடுத்தாராய்வாம்.

(இன்னும் வரும்)

R. S. சாம்பசிவ சர்மன், (தமிழ்ப் பண்டிதன்)

## ஈகை.

48-ம் பக்கத் தொடர்ச்சி.

அந்தோ! இத்தகைய உலோபியர் எண்ணிலர் மாடு மனை முதலிய சமஸ்த சம்பத்தும் இருப்பக் காணிப்பொன்னுங் கூட வரப்பெறாது உலகிற் பெற்ற நிந்தையையே சுமந்துபோகவும், இரந்தோர்க் கீவதே அருநிதிப் பெற்றதனாலாய பயன் என்றும், அதுவே சேமவைப்பென்றும் கருதிய அளியுடையார் செந்தமிழ்ப் புலவோரானும் மற்றோரானும் தாதாவெனப் புகழப் பெறுவதையும் நேரிற் கண்டும் அநேகர் பணப்பேய்களெனப் பெயரெடுக்க இசைவது என்கொண்டோ அறியேம்.

இவ்வாறு இம்மையினும் புகழின்றி மறுமையினும் சுகம் பெறாத உலோபியர்போல் இருந்தும் இறந்தாரையொத்து மாளாமல், தன்னிகர் துறவியர் நந்தம் திருவெண்காட்டடிகள் அருளியபடி,

"பிறக்கும்பொழுது கொடுவந்ததில்லைப் பிறந்துமண்மே
லிறக்கும்பொழுது கொடுபோவதில்லை யிடைநடுவே
குறிக்குமிச்செல்வஞ் சிவன்றந்ததென்று"

தெளிந்து, இச்செல்வம் என்றைக்கிருந்தாலும் நம்மை விட்டுப் பிரிந்துவிடுவது நிச்சயமேயாதலின், கைப்பொருளிழந்த காலையில் ஐயோ! இப்பாழும்பொருள் நம்மிடத்தில் இருக்கையில் தானே வள்ளன்மையால் பிறர்க்குதவிபுரிந்து புகழ்பெறாதுபோனேமே! குங்குமஞ்சுமந்த கத்தபம் என அப்பொருளின் பயன் பெறாது வீணே காத்திருந்தோமே! என்ற ஏக்கம் அடையாமல் 'காற்றுள்ளபோதே தூற்றிக்கொள்' என்றதற்கிணங்க சற்சனர்கட்குத் தம்மாலியன்ற வுதவிபுரிந்து புகழ்பெறுவோரே அறிஞராவார். திருவருட் சகாயம்.

ப. வீரப்பத்தஞ்சவராயன்.

# முஹம்மதுநபி சரித்திரம்.

## முதல்காண்டம்.

### ஆதிநாயகன்.

வேதநான் கினுக்கும் நாயக மணியாய்
விளங்கிய முஹம்மது நபிதம்
1சாதமோ டியற்கை செயற்கைக ளியாவுஞ்
சரித்திர மாகயா னுரைக்கச்
2சோதியாய்ச் சுடராய்ச் சுடர்மணி விளக்காய்த்
துரியமெய்ஞ் ஞானவாழ் வுடைய
நீதிசேர் ஆரி பீன்கள்கண் ணிடையில்
நிருத்தனைக் கருத்தினில் நினைவாம்.

### ஆன்மசொரூபம்.

ஆதியாய் நடுவாய் அந்தமாய் விளங்கும்
அகண்டமெய்ப் பூரணா னந்த
3சோதியாய் ஞான மனவிழி யதற்குத்
தோன்றியும் தோன்றிடாத் தனியை
4சாதமார் புறுக்கான் வேதமெய்க் கலிமாத்
தத்துவ மசிமொழிப் பொருளை
மாதவ மளிக்கும் தனதரு வுருவை
வணங்கியெக் காலும்வாழ்ந் திடுவாம்.

### நபிகணயகம்.

கந்தரக் குடையும் புவிதொடாப் பதமும்
காதகஸ் தூரிமா மணமும்
மந்தரப் புயமும் காருவா வதனில்
மதியமைத் தரசனின் றசையைச்
செந்திரு வனைய பூங்கொடி யாகச்
செய்தஅற் புதமும்வாய்ந் திலகும்
சந்திர வதன முஹம்மது நயினர்
தண்மலர்ப் பதஞ்சிரந் தரிப்பாம்.

1 சாதம்-பிறப்பு, 2 சோதி-பிரகாசம், 3 சோதி-உணர்வு, 4 சாதம்-உண்மை.

நாலியார்கள்.

*சீரிலக்கம் பதம் பெறுமா றற்புதங்கள் பலகாட்டி தீனைகாட்டிப்
பாரிலக்கமாவதற்குநபியிறசூல் பொருட்டாகப்படைத்துப்போந்த
ஓரிலக்கத் திருபதுநா லாயிரநன் னபிமார்கள் உபய சீதச்
சூரிலக்க மலரடியு நாலியார் களின்பதமுந் தொழுது வாழ்வாம்.

முகியித்தீனுண்டவர்கள்.

சுத்தமெய்ஞ் ஞானப் பழம்பொருள் வயங்குந்
துவாதசாந் தத்தருள் வெளியில்
முத்தொடு பவளம் மரகத மெனச்சொல்
முச்சுடர் களில்மணி வடிவாய்
சித்தொளிர் மூலக் குகையினில் கலிமாத்
திருமனுச் சுழிமுனைப் பொருளாய்த்
தத்துவா தீத முகியித்தீ னெலியென்
சற்குரு பதந்தலைக் கணிவாம்.

ஷாகுல்ஹமீது அவுலியா ஏனைய மகான்கள்.

நலமலி கேசங் களைந்திடும் போது
நாவிதன் கொடுத்தகாஞ் சனத்தால்
கலிமிசை யமிழும் மரக்கல மழைத்த
காரணர் ஷாகுல் ஹமீது
ஒலியிரிணைப் பாத பங்கய மதையும்
உலகினி லுளபல பெரியோர்
மலரடி களையும் மனமொழி மெய்யால்
வணங்கிகற் குணங்குடி வாழ்வாம்.

அப்துர்றகுமான் அவுலியா.

தாதாரும் பூஞ்சோலை கமழ்பெரு நாழி
தனிலுதித்துக் கீழ்வேளூர்த் தலத்தில் வாழும்
ஆதார மிஃதெனவென் வடிவைக் காட்டும்
அப்துர்றகு மானெலியெம் அருட் பிதாவின்

---

* 1-வது சீர்-நன்மை, இல்-வீடு, அக்கம்-ஆன்மா, 2-வது பார்-பூமி, இலக்கம்-துலக்கம், 3-வது ஓரிலக்கம்-ஒருலட்சம், 4-வது சூர்-துன்பம், இல்-இல்லாத, அக்கம், பொன்.

பாதார விந்தமதைத் தினமுக் காலும்
பணிந்துளன இருதயமாம் நளின வாசப்
போதாரும் படிநினைந்து நினைந்தென் னாளும்
போற்றுவேன் என்குறையை மாற்றுவேனே.

சிறப்புப்பாயிரம்.

தத்துவ ஞானோதய முஹம்மதுநன் னபியிறசூல் சரித நானம்
பத்தியுளோர் பிணிநீக்கித் தமிழுலகம் பரிமளிக்கப் பண்ணினால்
முத்தமிழ்வா ரிதிமடுத்து நாற்கவிமா மழைபொழிந்த முகிலென் [றுய்ந்த
வித்துவ சிகாமணிகள் புகழ்கருணை யானந்த விமலன் றானே.

நூற்செய்த காலம்.

நிகழ்கலி யோரை யாயிரத் திருபா
னிரண்டினி விரௌத்திரி நிகராய்ப்
பகரருங் கிசுறத் தாயிரத் தொருமுந்
நூற்றுமுப் பத்துவொன் பானிற்
புகழ்மிகு நபிதங் காதையைத் தமிழிற்
பொருவனும் வசனரூ பகமாய்ச்
செகமதிற் பலபேர் வேண்டுகோட் கிணங்கிச்
செய்தனன் சிறப்புறத் தானே.

அவையடக்கம்.

அறிவுளார் பிறர்தங் குற்றம் ஆய்ந்திடார் அறிவி லாத
சிறியவ ரெனது நூலிற் றேரவு முடியா குற்றம்
திறமெனே யொத்தார் குற்றம் செப்பவு மாட்டார் பாரிற்
பிறகெவர் குற்றம் காண்பார் பெருநிலத் தோங்கு மன்றே.

நாட்டுச்சிறப்பு.

அழகிய புட்பங்களின் அரும்புகள் கட்டவிழ்ந்து நறுமணத்தை நாலுபக்கங்களிலும் பரிமளிக்கச் செய்து மதுகரங்கள் சுழன்று சுழன்று வந்திறங்கி விரும்பும் மனோகரமான பசிய தேன்மாரி பொழியாநிற்கும் மாணிக்கம்போன்ற செந்தாமரைகளும், சுடர்ப்பிரகாசத்தைக் கான்றுமிழாநின்ற நீலரத்தினத்

ளைதப்போன்ற நீலோற்பலங்களும் பவளக்கொடிபோன்ற செவ் வாம்பல்களும் விகசிதஞ்செய்து பார்ப்பவர் கண்களைக் கவர்ந்து வனப்பிற் சிறந்து விளங்கும் இரமணீகரமான தடாகங்களிலுள்ள விசாலம்பொருந்திய சேற்கெண்டைகளானது அத்துறைகளிலி றங்கிச் சலக்கிரீடைபுரியும் அரம்பாஸ்திரிகளை நிகர்த்த மடந்தைப் பருவமுடைய மகளிர்கள் தங்களது நேத்திரங்களை நமக்கு நிகரா கச்சொல்லுவார்களா? அங்ஙனமாயின், அவர்களோடு சமர்பொரு துவோமென்று அடர்தல்போன்று பாயுந்தோறும் உண்டாகும் ஒலியினால் ஏனைய துறைகளில் நீர்மாந்திக்கொண்டிருக்கும் மான் கள் தமது கன்றுகளோடு வெருண்டு ஓட, அதைக்கண்ட சிங்கங் கள் நபிகணுயகம் அவர்கள் சிங்கங்களுக்குப் பிணை நிற்காமல் மான்களுக்கே பிணை நிற்கப்போவதால் இந்த மான் கூட்டத்தைச் சிநேகங்கொண்டு அதன்மூலமாய் நபிகள் பெருமானையும் தரி சித்து நாம் நற்கதியடைவோமெனக் கருதி அந்த மான்களோடு உறவாடி ஒற்றுமையாக வாழாநிற்கும் நீதியமைந்து, நாவல், இறலி, குசை, கிரௌஞ்சம், புட்கரம், தெங்கு, கமுகு என்னும் சப்த தீவுகளில் நேத்திரம்போல் விளங்குவது நாவலந்தீவு. நேத் திரமாகிய கண்களை நிகர்த்த நாவலந்தீவுக்கு கண்மணிபோன் றது அறபுநாடு.

(இன்னும் வரும்) (மணிமுத்து நாயகம்.)

---

## மேழிச்செல்வம்.

இலமென்றசை இருப்பாரைக்காணி
னிலமென்னு நல்லாணகும்—குறள்.

[உழவோருக்கு செல்வங்கொடுத்தலின் நிமித்தம் நல்லாள் என்று கூறப்படும் நிலமகள், செல்வத்திற்குக் காரணம் உழ வென அறிந்தும் அதுசெய்யாது வறியேம் என்று சோம்பித் திரியும் அறிவிலிகளைப் பார்த்து நகையாநிற்பள்.]

இப்பூவுலகிலுள்ள எல்லாத் தொழில்களுக்கும் தலைமை யானது "பயிர்த்தொழில்" என்பதை ஒருவரும் மறுக்கமுடி யாது. இதுபற்றியே தெய்வப்புலமைத் திருவள்ளுவ நாயனாரும்,

பிறதொழிலால் பொருள் சம்பாதித்த விடத்தும் உணவின் பொருட்டு உழவாரிடத்தே செல்லுதல்வேண்டு மாதலால் எல்லாத் தொழில்களினும் உழவுத்தொழிலே சிறந்தது என்னும் கருத்தை யடக்கி,

> சுழன்றுமேர்ப்பின்ன துலகமதனு
> லுழந்துமுழவே தலை.

எனக் கூறியுள்ளார். இத்தகைய பெருமை பொருந்தியதும் மகாபரிசுத்த தொழிலாகவுமுள்ள இத்தொழிலை நம்மில் வெகு சிலரே நடத்திவருவதாற்றான் நம்மிந்தியநாடு தாங்கொணு வறுமையில் மூழ்கி இருக்கின்றது.

> தாங்கொணு வறுமைவந்தாற் சபைதனிற் செல்லாணும்
> வேங்கைபால் வீரங்குன்றும் விருந்தினர் காணஞணும்
> பூங்கொடி மனையாட்கஞ்சும் புல்லருக் கிணக்கஞ்செய்யும்
> ஓங்கிய அறிவுகுன்றும் உலகெலாம் பழிக்குந்தானே.

என்றபடி நமது இந்தியநாடு மற்றைதேயங்களுக்கு நாணி, வீரங்குன்றி, அறிவின்றி உலகெலாம் பழிக்கும்படி மிக்கேவல நிலையில் இருப்பதற்குக் காரணமென்னவெனின் இந்தியர்கள் மேழிச்செல்வத்தைப் பொருட் படுத்தாமையே. அந்தோ! அந்தோ!! இந்தியர்களின் பரிதாபகர நிலையை நினைக்கில் ஆற்றெணு துக்கமுண்டாகின்றது. மேழிச்செல்வத்தின் பெருமையை அவர்கள் இன்னும் நன்குணரவில்லை போலும்.

எல்லாச் செல்வங்களினும் மேழிச்செல்வமே குறையாத செல்வம். "மேழிச்செல்வம் கோழைபடாது." என்பது உண்மை மொழி. கிருஷியின் சிறப்பைப்பற்றி:—

நமது அரும்பெருங்கிழவி ஔவை மூதாட்டியார்,

> "பூமிதிருத்தி யுண்"
> "சீரைத்தேடின் ஏரைத்தேடு"
> "தொழுதூண் சுவையின் உழுதூண் இனிது"
> "நெற்பயிர் விளை"
> "பருவத்தே பயிர்செய்" என்றும்

தெய்வப்புலமைத் திருவள்ளுவநாயனர்,

"ஒருவரிடத்து சேவித்து உண்ணும் உணவிலும் உழுது பயிரிட்டு உண்ணும் உணவே இனிது" என்ற கருத்தை யடக்கி,

உழுதுண்டு வாழ்வரேவாழ்வர் மற்றெல்லாம்
தொழுதுண்டு பின்செல்பவர், எனவும்

தேனினுமினிய சொல்லையுடைய கம்பர்,

கார்நடக்கும்படிநடக்கும் காராளர்தம்முடைய
ஏர்நடக்குமெனின்புகழ்சால் இயலிசைநாடகநடக்கும்
சீர்நடக்கும்திறநடக்கும் திருவறத்தின்செயல்நடக்கும்
பார்நடக்கும்படைநடக்கும் பசிநடக்கமாட்டாதே. எனவும்

சீர்வளரும்மறைவளரும் திறல்வேந்தர்முடிவளரும்
பேர்வளரும்வணிகருக்குப் பெருநிதியம்மிகவளரும்
ஏர்வளரும்திருவளரும் இசைவளரும்நடஞ்சூழ்ந்த
பார்வளரும்காராளர் பயிர்வளருந்திறத்தாலே. எனவும்

மிகவும் தெளிவாகக் கூறியுள்ளார்கள்.

ஔவையார் சோழராஜனை, "வரப்புயர" என வாழ்த்த அதன்பொருளை அறியாமற் சிலர்; "இது என்ன ஆசி" என வினவ, ஔவையார் "வரப்புயர, நீர் உயரும்; நீர் உயர, நிலமுயரும்; நிலமுயர குடி உயரும்; குடியுயர கோல் உயரும்" எனக் கூறி மேழிச்செல்வத்தின் பெருமையை விளக்கியுள்ளார்.

உமையவள் ஈசனைப்பார்த்து, "நீர் ஏன் பிச்சையெடுத்துண்கின்றீர்?

"ஏரும் இரண்டுளதாய் இல்லத்தில் வித்துளதாய்
நீரருகே சேர்ந்த நிலமுளதாய்—ஊரருகே
சென்று வரஎளிதாய் செய்வாரும் சொல்கேட்கில்
என்றும் உழவே யினிது."

என்றபடி உழவுக்குவேண்டிய உபகரணங்களில், திருமால் நிலம் அளிப்பன்; குபேரன் வித்தைக்கொடுப்பான்; பலராமன் கலப்பையைக் கொடுப்பான்; யமன் எருமைக்கிடாவைக் கொடுப்பான்; நமக்கு வாகனமாகிய ஓர் எருது இருக்கின்றது; முத்தலை

யுடைய சூலத்தை கொழு ஆக்கிக்கொள்வோம்; வலிமையோடு இழுத்திருக்குலதற்கு முதன்மையான வடக்கயிரும் மற்றும் வேண்டுவன யாவும் நமது அன்பர்களிடம் சென்று யாசித்துக் கொள்ளுவோம்; நமது இளையகுமாரனுகிய கந்தன் இனிதாக மாடுமேய்ப்பன்; இனி உழுது பயிரிடுதலே நன்று. இதைவிட்டு யாசித்துண்பது இழிவென"ச் சொல்ல, இது நல்லகாரியம் என நினைத்துப் பரமசிவன் களிப்படைந்தார் என்னும் கருத்தை யடக்கி, சிவப்பிரகாச சுவாமிகள் ஏர்நடத்தலின் சிறப்பைப்பற்றி பின்வருமாறு கூறியுள்ளார்.

அச்சுதனளிப்பனிலமுமதுநேயன்வித்தை யருளுவன்பலபத்திரன்
அலமுதவுவன்சமன்பகடீவனந்தமக் காளதோரெருதமுண்டே
முச்சிரவயிற்படையினைக்கொழுவதாக்குவோ மொய்ம்புடனிழுத்திறுக்க
முந்தியவடக்கயிற்றுடன்மற்றுநமதன்பர் முன்போயிரந்துகொள்வோம்
இச்சையுடைநமதிளையதனயனுகியகந்த னினிமையொடுமாடுமேய்ப்பன்
இனியுழுதுபயிரிடுதனன்றுநன் றிதைவிட் டிரந்துண்பதீனமெனவே
கச்சுமுலைமாதுமைவுரைத்திடப்புத்தியைக் கைக்கொண்டுளத்திலிதுநற்
காரியமெனக்கருதிமெத்தக்களித்திடுங் கண்ணுதலுமைக்காக்கவே,

ஆதலால் இந்திய சகோதரர்களே! நம்மிந்திய நாட்டின் வறுமை நிலையின் காரணத்தையும், அதை நீக்குவதாகிய மேழிச்செல்வத்தின் பெருமையையும் நீங்கள் அறிந்தும் இனி உறங்குவது நியாயமா! நியாயமா!! மிகவும் மேன்மை தருவதும் இன்றியமையாததுமான இக்கிருஷித் தொழிலில் நீங்கள் மிக்க முயற்சிசெய்து சாஸ்திர ஆராய்ச்சியுடன் தற்காலம் நடந்துவரும் விவசாய முறைகளில் பழகி பயிர்செய்வீர்களாகில் நம்மிந்திய நாடு வறுமைப்பிணி நீங்கப்பெற்று உன்னத நிலையை அடையும் என்பது சத்தியம். நமது ஞானசூரியனும் தனது கருத்துக்க ளில் மிக முக்கியமானதொன்று நிறைவேறப்பெற்று ஆனந்த மெய்துவான்.

"உழுதுண்டுவாழ்வதற் கொப்பில்லைகண்டீர்
பழுதுண்டுமற்றோர் பணிக்கு"

V. சேஷாத்திரி, விளமல்.

புளிவலம் ஸ்ரீ தண்டாயுதபாணிக் கடவுள்மீது
மணிமுத்துநாயகம் என்னும் காரணப்பெயர் புனைந்த
ஞானபூபதி, ஸ்ரீ கருணையானந்த சுவாமிகள்
திருவாய்மலர்ந்தருளிய

# திருப்பாவணி என்னும்

# கந்தப்புகழ்.

இதில் நவீன நாகரீக பார்ஸி வர்ணமெட்டுகளமைந்த இராக தாளங்களுடன் பரமானந்தத்தைத் தரும் கீர்த்தனங்கள், தேகப் பரவசஞ்செய்யும் பல்லவிகள், கல்மனமும் கரைந்துருகக்கூடிய அநு பல்லவிகள், பக்திரசக்கடலைப்புகட்டி ஆனந்தபாஷ்பம் சொரியச்செய்யும் சரணங்கள், கெம்பீரமும் சொகாசமும் பொருந்திய ஜாவளிகள், சொற்சுவை பொருட்சுவை நிறைந்து ததும்பி வாசிப்போர் உள்ளத்தை கொள்ளைகொண்டு என்ன வாக்கு! என்ன அருமை! என்று வியக்கும் படியான விருத்தங்கள் முதலியவை நிறைந்திருக்கின்றன. ஒவ்வொரு பாடலையும் பாடுபவரும் கேட்பவர்களும் திடுக்கிட்டு அதிசயித்து மயிர் கூச்சலடைந்து ஆஹா! ஆஹா!! பலே!. பேஷ்! என்று சிரக்கம்பம் கரக்கம்பம் கொண்டு மெய்மறந்து பக்தி முக்தி அடையக் கூடிய விதமாக அமைந்துள்ளது.

முதற்பாகம் அணா 0—2—0     2-ம்பாகம் அணா 0—2—0
முருகர் தியானம் அணா 1.     வேதாந்தபாஸ்கரன் ரூ. 1.

கருணாநிதி

# ஜீவகாந்த தீர்த்தம்.

இந்தத் தீர்த்தமானது சாதாரணமாய் ஆறு, குளம், ஏரி, கிணறு முதலியவைகளில் உள்ளதல்ல. நமது ஆன்றோர்கள் அனுபவித்து கையாண்டுவந்த முறைப்படி தை மாசி முதலான காலங்களில் பெய்யும் பனிநீரை பளிங்குப்பாத்திரங்களில் வாங்கி அதில் ஒரு மண்டலம்வரை மெஸ்மெரிஸ சக்தியால் ஜீவகாந்தப் பவரைச் செலுத்தி, ஜுரம், வயிற்றுவலி முதலிய எல்லாவியாதிகட்கும் பரமசஞ்சீவியாகத் தயாரிக்கப்பெற்றுள்ளது. வியாதிக்குத்தக்கபடி அவ்வப்போது மெஸ் மெரிசம் செய்து அனுப்பப்பெறும். பாலர் முதல் விருத்தர் வரையில உபயோகிக்கலாம். எவ்வித பத்தியமும் கிடையாது. ஜீவகாருண்யத்தை முன்னிட்டே குறைந்த விலை ஏற்படுத்தலாயிற்று.

2 அவுன்சுபாட்டில் 1-க்கு 0—8—0
டஜன் ஒன்றுக்கு 5—0—0
காலரா மாத்திரை பாட்டில் 1-க்கு 0—3—0

விலாசம்:—
மானேஜர்,
கருணாநிதி வர்த்தக சாலை,
ஞானசூரியன் ஆபீஸ்,
விஜயபுரம், திருவாரூர். S. I. Ry.

# ஜனங்களே! இன்னுமா தூங்குகிறீர்கள்?

# வேதாந்த பாஸ்கரன்

## என்னும் நமது மெய்ஞ்ஞான சூரியன் உதயமான பின்னரும் தூங்குவது ஞாயமா! — ஞாயமா!!

அஞ்ஞான நித்திரை நீங்கி! மெய்ஞ்ஞான விழிப்படையுங்கள்!!

இவ்வுலகின்கண் ஆத்மலாபம் அடைய அனேக பக்குவிகள் எண்ணியும் (தூணைக் கட்டிப்பிடித்துக்கொண்டு விடமாட்டேனென்குதே! விடமாட்டேனென்குதே!! என ஓலமிடுபவரைப்போல்) பிரபஞ்சவாழ்க்கையில் அதிகமாக மனதை நுழைத்துக்கொண்டு ஐயோ! பிரபஞ்சம் விடமாட்டேனென்குதே? என்று வருந்துகின்றனர். தூணை நாம் பிடித்துக்கொண்டு விடமாட்டேனென்கிறோமா? தூண் நம்மைப் பிடித்துக்கொண்டு விடமாட்டேன் என்கிறதா? என்றறிந்தவர் சிலரே. ஆதலின் காட்டிலிருப்பினும் நாட்டிலிருப்பினும் கமல நீர்போல் பற்றற்றிருக்க வேண்டுமேயன்றி, மலை, குகை, முதலானவைகளில் வசிக்கவேண்டுமென்கிற நிர்ப்பந்தமில்லை

மரணமாவதோ இன்ன நேரமென்று காணுவது அசாத்தியமாயிருக்கிறது அறுப்பதற்கு கத்தி தீட்டுகிறபோதும் ஆடு அசைபோடுவதுபோல் காலமெல்லாம் கதை, காவியம், பகடி, பரிகாசவேடிக்கை விளையாட்டுகளில் பொழுதைப் போக்கிவிட்டு சாகப்போகிறகாலத்தில் சங்கரா! சங்கரா!! என்று பிதற்றுவதிற் பயனில்லை என்பதை ஆலோசித்து ஆத்மலாபம் பெற முயலுங்கள்.

தேன்வண்டானது தானும் தேனையுண்ணாமல் தேனை எடுக்க வருபவனையுங் கொட்டுகிற தன்மைபோல் இவ்வுலக வாழ்வையே சதமென நினைந்து, நீங்கள் ஆத்மலாபம்பெற முயலாவிடினும் முயற்சிப்பவர்களை தடுக்காதிருங்கள். ஆத்மானுசந்தானம் பெறுவதற்கு அருமை பெருமைவாய்ந்த நமது வேதாந்த பாஸ்கரன் ஓர் சிறந்த வழிகாட்டியாகும். எனெனில் சிலர் எழுதிய சாடு முரடான வசன நடைகளைப்போலின்றி நளினமான இனிய செந்தமிழ் வசன நடையில் பன்னூற்களிலிருந்தும், மேற்கோள் தீட்டி மிக அழகாயும், சமாசமாயும் எழுதப்பெற்றிருப்பதால் முஹம்மதியர்கள், இந்துக்கள், கிறிஸ்தவர்கள் முதலிய எல்லாமதஸ்தர்களும் வாங்கி வாசிக்கற்பாலதே. இந்நூலை வாசிக்காதவர்கள் வாஸ்தவத்தில் துர்ப்பாக்கியர்களே! தமிழ்க்கல்வி குன்றிய இக்காலத்தில் இத்தகைய நூல் வெளி வந்துலாவுவதானது தமிழ் நாட்டிற்கு எதிர்பாராத ஓர் பெரிய அதிர்ஷ்டமென்றே சொல்லவேண்டும்.

வேதாந்த பாஸ்கரன் விலை ரூ. 1—0—0

யோக ரகசியம் (ஒருபாகம்) விலை அணா 0—6—0

விலாசம்:—மானேஜர், கருணாநிதி வர்த்தகசாலை, ஞானசூரியன் ஆபீஸ், விஜயபுரம்—திருவாரூர். S. I. Ry.

PRINTED AND PUBLISHED BY SWAMI KARUNAIYANANDA
at the KARUNANITHI PRESS, VIJAYAPURAM.